செய்தி வெளியீடு எண். 21-2017 நாள்: 09.07.2017

# விழுப்புரம் கோலியனூர் வாய்க்கால் ரயில்வே மேம்பாலம் சீரமைப்புப் பணிகளையும், விழுப்புரம் - காட்பாடி இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணிகளையும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

*****

விழுப்புரம் கோலியனூர் வாய்க்கால் ரயில்வே மேம்பாலம் சீரமைப்புப் பணிகளையும், விழுப்புரம் - காட்பாடி இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணிகளையும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று (09.07.2017) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

விழுப்புரம் நகரில் பழைய தேசிய நெடுஞ்சாலையில் விழுப்புரம் மற்றும் வெங்கடேசபுரம் இரயில் நிலையங்களுக்கு இடையே விழுப்புரம் - காட்பாடி பிரிவில் மேம்பாலம் கட்டுவதற்காக நபார்டு மற்றும் கிராம சாலைகள் உட்கோட்டம் பிரிவு நெடுஞ்சாலைத்துறைக்கு ரூ.3475.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பணி 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் துவங்கப்பட்டு, இப்பணி விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், ரூ.2 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும், விழுப்புரம் கோலியனூர் வாய்க்கால் ரயில்வே மேம்பாலம் சீரமைப்புப் பணியினை ஆய்வு செய்தார். இப்பணியினை செப்டம்பர் 15ம் தேதிக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மேற்பார்வையில், பணிகள் விரைவாக நடைபெற்று வருவதால் ஆகஸ்ட் முதல் வாரத்திலேயே பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மேம்பாலம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பணிகள் விரைவாக நடைபெற்றாலும், மேம்பாலத்தின் தரத்தினை கருத்தில் கொண்டு, பணிகள் நடைபெற்று வருகிறது என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜெயக்குமார்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.பிரியா, ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை, கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.க.காமராஜ், வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.பிரபு, தமிழ்நாடு மாநில கூட்டுறவு சர்க்கரை இணைய தலைவர் திரு.கே.ஜி.பி.ஞானமூர்த்தி, ஆவின் தலைவர் திரு.விஜயகுமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.சண்முகம், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜீனத்பானு, விழுப்புரம் வட்டாட்சியர் திரு.சுந்தர்ராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.